# பாதம் பணிந்தோம் தாயே

பாதம் பணிந்தோம் தாயே
கன்னி மாமரியே
கனிவுடன் பார்ப்பாய் அம்மா
நீயே எம்மையே

**1**
அன்னையே அருள் நிறைந்தவளே
ஆண்டவரைச் சுமந்தவளே - 2
புவி வாழும் எம்மையே
காத்திடுவாய் என்றும்
காத்திடுவாய் (2)
ஆவே மரியே வாழ்க ( 4 )

**2**
தூய்மையே தியாகத்தின் உருவே
மகனைப் பலி கொடுத்தவளே - ( 2 )
உடன்படிக்கைப் பேழையே
வேண்டிடுவாய் என்றும்
வேண்டிடுவாய் (2) ஆவே மரியே வாழ்க ( 4 )

**3**
பெண்களில் பேறுபெற்றவளே
கதிரவனை அணிந்தவளே - ( 2 )
கடுந்துயரில் துடிக்கின்றோம்
தாங்கிடுவாய் எம்மைத்
தாங்கிடுவாய் (2) ஆவே மரியே வாழ்க ( 4 )